**Hougang Heritage Trail**
ஹவ்காங் மரபுடைமைப் பாதைகள்

ஹவ்காங் மரபுடைமைப் பாதைகள், சிங்கப்பூரில் உள்ள இடங்களின் வரலாற்றையும் சமூக நினைவுகளையும் ஆவணப்படுத்தி முன்வைப்பதற்கான தேசிய மரபுடைமைக் கழகம் அவசரகால முயற்சிகளின் ஒரு பகுதியாகும். இந்த தடம் அப்பகுதியில் வேலை செய்தவர்கள், வாழ்ந்தவர்கள் அல்லது விளையாடியவர்களுக்கு பிரியமான நினைவுகளை மீண்டும் கொண்டு வரும் என்று நம்புகிறோம், மேலும் பார்வையாளர்களுக்கும் புதிய குடியிருப்பாளர்களுக்கும் பயனுள்ள தகவல் ஆதாரமாக செயல்படும்.

---

**Ramakrishna Mission Singapore**
**இராமகிருஷ்ணா மிஷன் சிங்கப்பூர்**
**179 Bartley Road**

இராமகிருஷ்ணா மிஷன் சிங்கப்பூர் 1928ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. ஆன்மீகத்தை வளர்ப்பதிலும் சமூக நலனைக் காப்பதிலும் மிஷன் கவனம் செலுத்துகிறது. சிறுவர்களுக்கான பள்ளியைக் கட்டுவதற்காக 1941ல் இந்த நிலப்பகுதியை மிஷன் வாங்கியது. இரண்டாம் உலகப் போர் தொடங்கியபோது, ஆதரவற்ற, பெற்றோரை இழந்த சிறுவர்களுக்காகத் தற்காலிக மரப்பலகை வீட்டைக் கட்ட மிஷன் முடிவெடுத்தது. 1948ஆம் ஆண்டுக்குள், அங்கு 77 சிறுவர்கள் தங்கியிருந்தனர்.

1948 டிசம்பர் 10 அன்று, தென்கிழக்காசியாவுக்கான தலைமை ஆணையர் மெல்கம் மெக்டோனல்டு, புதிய நிரந்தரக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நட்டார். கட்டடத்தின் முதல் மாடி 1950ல் கட்டு முடிக்கப்பட்டது. அப்போதைய இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு, கட்டடத்தை அதிகாரபூர்வமாகத் திறந்து வைத்தார்.

மிஷனின் வளாகத்தில் ஒரு கோயிலும் அமைந்துள்ளது. கொடை வள்ளலும் தொழிலதிபருமான P. கோவிந்தசாமி பிள்ளை வழங்கிய நன்கொடையுடன் 1952ல் இக்கோயில் கட்டப்பட்டது. சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு நினைவு கட்டடமும் வளாகத்தில் உள்ளது. வெளியுறவு அமைச்சர் S. ராஜரத்தினம் 1969ல் இக்கட்டடத்தை அதிகாரபூர்வமாகத் திறந்து வைத்தார். இந்தக் கட்டடத்தில் ஒரு நூலகமும், ஒரு வாசிப்பு அறையும், அலுவலகங்களும், தங்கும் அறைகளும் உள்ளன.

இராமகிருஷ்ணா மிஷன் அதன் சமூகநல, மேம்பாட்டு முனைப்புகளைத் தொடர்ந்து விரிவுபடுத்தி வந்துள்ளது. பாலர் பள்ளி, இலவச மருந்தகம், ஆலோசனை சேவைகள் ஆகியன முறையே 1992, 1993, 1995 ஆண்டுகளில் தொடங்கப்பட்டன. இன்று, சிங்கப்பூரிலுள்ள வசதி குறைவான, எளிதில் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய மக்களுக்கு மிஷன் தொடர்ந்து சேவை செய்து வருகிறது.



இராமகிருஷ்ணா மிஷனில் உள்ள கோயில், 1954
*சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



விவேகானந்தர் கலாச்சார நினைவு கட்டடம் பின்னணியில் இருக்க, மிஷனில் சிறுவர்கள் விளையாடுகின்றனர், தேதியில்லாதது
*இராமகிருஷ்ணா மிஷன் சிங்கப்பூருக்கு நன்றி*



சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு நினைவு கட்டடத்தை வெளியுறவு அமைச்சர் S. ராஜரத்தினம் அதிகாரபூர்வமாகத் திறந்து வைக்கிறார், 1969

*தகவல், கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*

---

**Serangoon Khiung Jai Co-Villagers Association**
**சிராங்கூன் கியுங் ஜாய் கோ-வில்லேஜர்ஸ் சங்கம்**
**102 Lorong Ah Soo**

லோரோங் ஆ சூவில் வசித்து வந்த ஹய்னானீஸ் சமூகத்தினரைப் பிரதிநிதிக்கவும் சேவை செய்யவும் சிராங்கூன் கியுங் ஜாய் கோ-வில்லேஜர்ஸ் சங்கம் 1958ல் பதிவு செய்யப்பட்டு, 1962ல் அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது. 1980களுக்கு முன்பாக, லோரோங் ஆ சூ வட்டாரம் ஹாய் லாம் ஹிங் (தியோச்சூ, ஹாக்கியன் மொழிகளில் “ஹய்னான் தோட்டம்”) எனப் பொதுவாக அழைக்கப்பட்டது. அந்தச் சாலையில் சில நூறு ஹய்னானீஸ் குடும்பங்கள் வாழ்ந்து வந்தது அதற்குக் காரணம்.

ஹய்னானீஸ் சமூகத்தில் அணுக்கமான நல்லுறவை வளர்ப்பதும் பரஸ்பர உதவி வழங்குவதும் சங்கத்தின் அடிப்படை பணியாக இருந்தது. ஹய்னானீஸ் தெருக்கூத்துக்கும் சங்கம் ஆதரவளித்தது. 1964ல், முன்னாள் யீ குவாங் தெருக்கூத்து குழுவைச் சங்கம் தொடங்கியது. இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்த திறனாளர்களில் பலரும் சிங்கப்பூரில் பிரசித்திபெற்ற தெருக்கூத்து கலைஞர்களாக வளர்ச்சி அடைந்தனர்.

ஹாய் லாம் ஹிங்கில் டுவீ போயி டெங் நியாங் கோயில், வா மொங் பள்ளி போன்ற மற்ற முக்கியமான ஹய்னானீஸ் அமைப்புகளும் இருந்தன. அவை சிராங்கூன் கியுங் ஜாய் கோ-வில்லேஜர்ஸ் சங்கத்துடன் வலுவான தொடர்புகளைக் கொண்டிருந்தன. கப்பல் பயணிகளைப் பாதுகாக்கும் பெண் தெய்வமான ஷுய் வெய் ஷெங் நியாங் கோயிலில் வழிபடப்பட்டது. பள்ளி 1937ல் தொடங்கப்பட்டது. ஆரம்பகால ஆண்டுகளில், கோயிலின் தெருக்கூத்து மேடையில் வகுப்புகள் நடத்தப்பட்டன. இம்மூன்று அமைப்புகளும் இப்பகுதியில் வசித்து வந்த ஹய்னானீஸ் சமூகத்தினரின் சமூக, கல்வி, ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றின.

சிராங்கூன் கியுங் ஜாய் கோ-வில்லேஜர்ஸ் சங்கம் 1984ல் லோரோங் ஆ சூவில் இருந்து தற்போதைய இடத்திற்கு மாறியது. சிங்கப்பூரிலுள்ள ஹய்னானீஸ் சமூகத்தினரிடையில் பந்தம் வளர்க்கும் பணியில் சங்கம் இன்று வரை முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது.





லோரோங் ஆ சூவில் இருந்த சிராங்கூன் கியுங் ஜாய் கோ-வில்லேஜர்ஸ் சங்கத்தின் முன்னாள் தலைமையகத்தில் உறுப்பினர்கள், 1962

*சிராங்கூன் கியுங் ஜாய் கோ-வில்லேஜர்ஸ் சங்கத்திற்கு நன்றி*



வா மொங் பள்ளி மாணவர்களின் வகுப்பறையாகப் பயன்பட்ட டுவீ போயி டெங் நியாங் கோயிலின் தெருக்கூத்து மேடை, தேதியில்லாதது

*டுவீ போயி டெங் நியாங் கோயிலுக்கு நன்றி*



குவாங் யீ தெருக்கூத்து குழு உருவாக்கிய திறனாளர்களில் ஒருவரான பிரசித்திபெற்ற ஹய்னானீஸ் தெருக்கூத்து கலைஞர் ஃபூ சிங் யுன் (வலது), சுவே ஜொங் மெய் (சீன மொழியில்: பனியில் அரும்பிய சீமை இலந்தை), 1964

*சிராங்கூன் கியுங் ஜாய் கோ-வில்லேஜர்ஸ் சங்கத்திற்கு நன்றி*

---

**Paya Lebar Methodist Church**
**பாய லேபார் மெத்தடிஸ்ட் தேவாலயம்**
**5 Boundary Road**

மெத்தடிஸ்ட் தேவாலயம் 1932ல் பாய லேபார் மெத்தடிஸ்ட் தேவாலயத்தை சிங்கப்பூரில் நிறுவியது. ஆயிலும், 1916ஆம் ஆண்டிலிருந்தே ஹவ்காங்கில் மெத்தடிஸ்ட் பிரிவினர் இருந்து வந்தனர். அந்த ஆண்டில், பள்ளி ஒன்றை அமைப்பதற்காக பவுண்டரி சாலையில் ஒரு நிலப்பகுதியை மெத்தடிஸ்ட் தேவாலயம் வாங்கியது.

பாய லேபார் ஆங்கிலப் பள்ளி என்ற அந்தப் பள்ளி, 1918ல் வகுப்புகள் நடத்தத் தொடங்கியது. பின்னர் 1929ல் அப்பர் சிராங்கூன் சாலையில் இருந்த கடைவீட்டுக்கு இடம் மாறிச் சென்றது. 1932ல், மெத்தடிஸ்ட் தேவாலயம் அதே கடைவீட்டில் பாய லேபார் மெத்தடிஸ்ட் தேவாலயத்தைத் தொடங்கியது. 1938ல், பவுண்டரி சாலையில் தற்போதைய அமைவிடத்தில் புதிய தேவாலயக் கட்டடம் கட்டப்பட்டது. காலப்போக்கில், பற்பல மறுகட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போதைய கட்டடம் 1998ல் கட்டி முடிக்கப்பட்டது.

பாய லேபார் மெத்தடிஸ்ட் தேவாலயம் பெரனக்கான் கிறிஸ்துவர்களுக்காக பாபா மலாய் மொழியில் பிரார்த்தனை கூட்டங்கள் நடத்தியது. சீனப் பிரிவான பாய லேபார் மெத்தடிஸ்ட் சீன தேவாலயமும் 1938 முதல் 1968 வரை இந்தத் தேவாலயக் கட்டடத்தில் அமைந்திருந்தது. அதன்பிறகு, அப்பர் பாய லேபார் சாலையில் தற்போதைய அமைவிடத்திற்கு சீன தேவாலயம் மாறிச் சென்றது. பாய லேபார் மெத்தடிஸ்ட் தேவாலயம் இன்றுவரை சமூகச் சேவைகளில் ஈடுபட்டு வருகிறது. மாணவர்களுக்குப் பள்ளிக்குப் பிந்திய பராமரிப்பு சேவை வழங்குவதோடு, பார்வை குறைபாடு உள்ளவர்களின் நலனுக்கும் ஆதரவளிக்கிறது.

பாய லேபார் மெத்தடிஸ்ட் தேவாலயம் தவிர, ஹவ்காங்கில் கல்விக் கழகங்களையும் மெத்தடிஸ்ட் தேவாலயம் அமைத்தது. சிறுவர்களுக்கான பள்ளியாகத் தொடங்கப்பட்ட பாய லேபார் ஆங்கிலப் பள்ளிதான் பிற்பாடு பாய லேபார் மெத்தடிஸ்ட் பெண்கள் பள்ளியாக (தொடக்கநிலை மற்றும் உயர்நிலை) மாறியது. தற்போதைய அமைவிடத்திற்கு மாறிச் செல்வதற்குமுன், பாய லேபார் மெத்தடிஸ்ட் தேவாலயத்தின் மத்திய கட்டடத்திற்குப் பின்னால் தற்போது அமைந்திருக்கும் கொவினன்ட் நிலையத்தில் பள்ளி அமைந்திருந்தது.



பாய லேபார் மெத்தடிஸ்ட் தேவாலயத்தின் முதல் கட்டடம், தேதியில்லாதது
*பாய லேபார் மெத்தடிஸ்ட் தேவாலயத்திற்கு நன்றி*



தேவாலயத்தில் பெரனக்கான் பிரார்த்தனை கூட்டத்தில் கலந்துகொள்ளும் திருச்சபையினர், 1960கள்
*பாய லேபார் மெத்தடிஸ்ட் தேவாலயத்திற்கு நன்றி*



தேவாலயத்திற்கு வெளியில் சீனப் பிரிவின் திருச்சபையினர், தேதியில்லாதது
*பாய லேபார் மெத்தடிஸ்ட் தேவாலயத்திற்கு நன்றி*

---

**Zi Yun Kai Ji Gong**
**ஜி யுன் காய் ஜி கொங்**
**58 Hougang Ave 3**

1996ல் கட்டி முடிக்கப்பட்ட ஜி யுன் காய் ஜி கொங் வளாகத்தில் மூன்று கோயில்கள் அமைந்துள்ளன. காய் ஹாக் டொங், கியட் சன் பியோ மற்றும் சாவ் யிங் கொங். இவை முறையே வொல்ஸ்கெல் சாலை, லோரோங் சுவான் மற்றும் யீஷூனில் அதற்குமுன் அமைந்திருந்தன. மூன்று கோயில்களும் ஹாக்கியன் சமூகத்தினரால் தொடங்கப்பட்டவை.

காய் ஹாக் டொங் கோயில், அதை நிறுவின லிம் லோ (1852-1929), சீனாவின் ஃபூஜியன் மாநிலத்தின் நன் ஆன் வட்டாரத்தைச் சேர்ந்த குலமரபினர் ஆகியோரது குடும்பச் சந்நிதியாகத் தொடங்கப்பட்டது. முன்னோடி கட்டட மேம்பாட்டாளரும் தொழிலதிபருமான லிம் லோ, போர்க்கால மாவீரர் லிம் போ செங்கின் தந்தை ஆவார். ஆரம்பத்தில் வொல்ஸ்கெல் சாலையிலிருந்த லிம்மின் செங்கல் தொழிற்சாலையில் இந்தச் சந்நிதி அமைந்திருந்தது. பக்தர்களின் எண்ணிக்கை பெருகியதைத் தொடர்ந்து 1919ல் நிரந்தர கோயில் கட்டப்பட்டது. அக்கோயில் 1990களில் தற்போதைய இடத்திற்கு மாறிச் சென்றது.

கியட் சன் பியோ கோயில், “டான்” என்ற குடும்பப் பெயரைக் கொண்ட ஹாக்கியன் குடியேறிகளால் 1898ல் லோரோங் சுவானில் அமைக்கப்பட்டது. டான் குடும்பங்களின் குடும்பச் சந்நிதியாகப் பயன்பட்ட இக்கோயில், பிற்பாடு மற்ற குலமரபுகளையும் கிளை மொழிகளையும் சேர்ந்த பக்தர்களுக்கும் திறந்து விடப்பட்டது. சமய வழிபாடுகள் தவிர, ஹவ்காங் வட்டாரத்தில் வசிக்கும் வசதி குறைவான மாணவர்களுக்குக் கல்வி உதவி நிதியும் வழங்குகிறது இக்கோயில்.

மூன்று கோயில்களிலும் ஆகப் புதியதான சாவ் யிங் கொங், ஃபூஜியன் மாநிலத்தின் நன் ஆன் வட்டாரத்திலிருந்த இதே பெயரைக் கொண்டிருந்த மூலக் கோயிலிலிருந்து கோயில் தலைவர்கள் எடுத்துவந்த ஊதுவத்தி சாம்பலுடன் 1988ல் யீஷூனில் தொடங்கப்பட்டது. இன்று, வருகை பரிமாற்றங்களின் வாயிலாக, சீனாவிலுள்ள மூலக் கோயிலுடன் வலுவான உறவை இக்கோயில் நிலைநாட்டி வருகிறது.



காய் ஹாக் டொங் கோயில் இடம் மாறுவதற்குமுன் வொல்ஸ்கெல் சாலையிலிருந்த லிம்மின் செங்கல் தொழிற்சாலையில் அமைந்திருந்தது, தேதியில்லாதது

*காய் ஹாக் டொங் கோயிலுக்கு நன்றி*



லிம் போ செங்கின் தந்தை லிம் லோவின் உருவப்படம். இவர் லிம் சீ கீ என்றும் அறியப்படுகிறார், 1920கள்
*லீ பிரதர்ஸ் ஸ்டூடியோவின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



கியட் சன் பியோ குடும்பச் சந்நிதி, 2020
*தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*



சாவ் யிங் கொங்கின் முன்னாள் அமைவிடமான யீஷூனில்
நடைபெற்ற திறப்பு விழாவில் பக்தர்கள், 1988
*சாவ் யிங் கொங்குக்கு நன்றி*

---

**Church of the Nativity of the Blessed Virgin Mary**
**சர்ச் ஆஃப் த நேட்டிவிட்டி ஆஃப் த பிலஸ்டு வர்ஜின் மேரி தேவாலயம்1259 Upper Serangoon Road**

சர்ச் ஆஃப் த நேட்டிவிட்டி ஆஃப் த பிலஸ்டு வர்ஜின் மேரி தேவாலயம், ஹவ்காங்கின் ஆகப் பழமையான வழிபாட்டுத் தலமாகத் திகழ்கிறது. பிரான்சில் இருந்த Les Mission Étrangères de Paris எனும் அமைப்பு, 1852ல் முதல் சமயப் பரப்பாளராக பாதிரியார் அம்ப்ரோஸ் மேஸ்ட்ரியை ஹவ்காங்குக்கு அனுப்பி வைத்தபோது தேவாயலயத்தின் வரலாறு தொடங்கியது. பாதிரியார் மேஸ்ட்ரி காலனித்துவ அரசாங்கத்திடமிருந்து ஒரு நிலத்தைப் பெற்று, வளர்ந்துவந்த தியோச்சூ கத்தோலிக்க மக்களுக்குச் சேவை செய்வதற்காக 1853ல் அத்தாப்பு கூரையுள்ள தேவாலயத்தை நிறுவினார். ஆரம்பத்தில் செயின்ட் மேரி தேவாலயம் என்றழைக்கப்பட்ட தேவாலயம், பின்னர் செங்கல் கட்டடமாகச் சீரமைத்து கட்டப்பட்டது.

1901ல், “நியோ கோதிக்” பாணியிலான புதிய தேவாலயத்தை சமயப் பரப்புக்குழு கட்டியது. சர்ச் ஆஃப் த நேட்டிவிட்டி ஆஃப் த பிலஸ்டு வர்ஜின் மேரி தேவாலயம் எனப் பெயர் மாற்றப்பட்ட அந்தக் கட்டடத்தில் பக்கவாட்டு இடைச்சுவர்கள், சரணாலயம், திருப்பூட்டறை ஆகியன 1933ல் அமைக்கப்பட்டன. தேவாலயத்தின் முன்புறத்தில் உள்ள மேரியின் பளிங்குச் சிலையை ஜோகூர் சுல்தான் இப்ராஹிம் அன்பளிப்பாக வழங்கியிருந்தார். அந்தச் சிலை, 1946ல் ஊர்வலத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின்போது, கிராமவாசிகள் தஞ்சம் புகும் இடமாகத் தேவாலயம் பயன்பட்டது. அதோடு, அப்பகுதியில் வாழ்ந்து வந்த இளையர்களுக்குக் கல்வி புகட்டும் முக்கிய பங்கையும் தேவாலயம் நிறைவேற்றியது. தேவாலய வளாகத்தில் சில முன்னணிப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. இன்றைய ஹோலி இன்னசன்ட்ஸ் உயர்நிலைப் பள்ளி, மான்ட்ஃபர்ட் ஜூனியர் மற்றும் உயர்நிலைப் பள்ளி, CHIJ அவர் லேடி ஆஃப் த நேட்டிவிட்டி பள்ளி ஆகியன அவற்றுள் அடங்கும்.

தேவாலயம் 2005ல் தேசிய நினைவுச்சின்னமாக அறிவிக்கப்பட்டது. தேவாலயத்தில் இன்றுவரை வாரந்தோறும் தியோச்சூ மொழியில் நடத்தப்படும் பிரார்த்தனை கூட்டங்கள், தியோச்சூ சமூகத்திற்கும் தேவாலயத்திற்கும் இடையிலான வலுவான வரலாற்றுத் தொடர்புகளுக்குச் சான்றாக விளங்குகின்றன.



சர்ச் ஆஃப் த நேட்டிவிட்டி ஆஃப் த பிலஸ்டு வர்ஜின் மேரி தேவாலயம், 1976

*சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



தேவாலயத்தையும் அதன் வளாகத்தில் அமைந்திருந்த பல்வேறு பள்ளிக் கட்டடங்களையும் காட்டும் ஆகாயத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படம், 1958

சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஒரு திரட்டிலுள்ள, பிரிட்டிஷ் ராயல் ஆகாயப்படை 1940க்கும் 1970களுக்கும் இடையில்

விமானத்திலிருந்து எடுத்த புகைப்படங்கள். முடியாட்சியின் பதிப்புரிமை.



அவர் லேடி ஆஃப் பெர்பெச்சுவல் சக்கியூர் சின்னம் தேவாலய வளாகத்தில் தூக்கிச்செல்லப்படும் ஊர்வலம், 1964
*சர்ச் ஆஃப் த நேட்டிவிட்டி ஆஃப் த பிலஸ்டு வர்ஜின் மேரி தேவாலயத்திற்கு நன்றி*

---

**5th Milestone**
**5வது மைல்கல்**

அப்பர் சிராங்கூன் சாலையின் 5வது மைல்கல், அப்பர் சிராங்கூன் சாலையை புக்கிட் அராங் சாலை சந்திக்கும் இடத்திற்கு அருகிலிருந்து, ஃபிளவர் சாலைக்கு அருகிலுள்ள 6வது மைல்கல் வரை நீடிக்கிறது. நகர்ப் பகுதியிலிருந்து மைல் கணக்கில் தூரத்தை அடையாளம் காட்ட மைல்கற்களை நிறுவும் காலனித்துவ நடைமுறையினால் இடங்களை ஆக அருகிலுள்ள மைல்கற்களால் குறிப்பிடும் வழக்கம் தொடங்கியது.

ஹவ்காங்கில் தியோச்சூ சமூகமே பிரதானமாக இருந்தபோதிலும், 5வது மைல்கல்லில் மற்ற சமூகங்களும் வாழ்ந்து வந்தன. ஹாக்கியன் சமூகமும் (லோரோங் லியூ லியன் நெடுகில்) ஹய்னானீஸ் சமூகமும் (லோரோங் ஆ சூ நெடுகில்) இதில் உள்ளடங்கும். ஹில்சைட் சாலையிலிருந்து சைமன் சாலை வரை, யுரேசியர் சமூகமும் சில மலாய் கிராமங்களும் கூட இருந்தன. 1980களுக்கு முன்பாக, 5வது மைல்கல்லில் பள்ளிகள், பல்வேறு இனத்தவரின் வழிபாட்டுத் தலங்கள், கடைகள், சந்தை போன்ற பற்பல வசதிகள் ஏற்கனவே அமைந்திருந்தன.

குடியிருப்பாளர்கள் பலரது சமூக வாழ்க்கை, லிம் டுவா டாவ் சாலைக்கு அருகிலிருந்த ஐந்தரை மைல்கல் பகுதியை மையமாகக் கொண்டிருந்தது. 1950களின் முற்பகுதியில், பொறுப்பமைப்புகள் லிம் டுவா டாவ் சந்தையைக் கட்டின. அந்தச் சந்தை 1990கள் வரை செயல்பட்டது. சந்தை திறக்கப்பட்டபோது, விண்ணப்பம் செய்த அனைவருக்கும் இடம் கொடுக்க போதுமான உணவங்காடிக் கடைகள் சந்தையில் இல்லை. அதனால், சந்தையின் சுற்றுவட்டார நடைபாதைகளில் நடமாடும் உணவங்காடிக்காரர்கள் பரவலாகக் காணப்பட்டனர்.

5வது மைல்கல்லின் மற்றொரு சமூக மையம் டெக் சாய் டெரஸ். இதன் கீழ் மாடிகளில் கடைகளும் உணவகங்களும் அமைந்திருந்தன. முன்னாள் சந்தைக்குப் பக்கத்தில் அமைந்திருந்த இந்தக் கடைவீடுகள், மறுமேம்பாட்டுக்கு முந்திய காலக்கட்டத்தின் கடைசி நினைவுச்சின்னமாக இன்றும் நிலைத்திருக்கின்றன. தொழிலதிபர் லிம் டெக் சாய் 1928ல் கட்டிய இந்தக் கடைவீடுகள், “ஆர்ட் டெக்கோ” பாணியில் வடிவமைக்கப்பட்டன. கடைவீடுகளின் இரண்டாவது மாடி சன்னல்களுக்கு மேலே வடிவியல் அலங்கரிப்புகளைக் காணலாம். டெக் சாய் டெரஸ் பிரபலமான உணவு வகைகளுக்கு இன்றுவரை பெயர்பெற்று விளங்குகிறது.



அப்பர் சிராங்கூன் சாலையின் 5வது மைல்கல்லும் அதன் சுற்றுவட்டாரமும், 1938

*சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி.*



புத்தம்புதிய உணவுப் பொருட்களின் விற்பனைக்குப்
பெயர்பெற்றிருந்த லிம் டுவா டாவ் சந்தை, 1986
*சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*




டெக் சாய் டெரஸின் புகைப்படம், 1983
*லீ கிப் லின் திரட்டிலிருந்து பெறப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. லீ கிப் லின் மற்றும் தேசிய நூலக வாரியம், சிங்கப்பூர் 2009*



அப்பர் சிராங்கூன் சாலையின் 5வது மைல்கல்லின் சுற்றுவட்டாரம்.
வலதுபக்க முனையில் பாய லேபார் மெத்தடிஸ்ட் தேவாலயம்
அமைந்துள்ளது, 1967

*தகவல், கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*

---

**Hougang Tou Mu Kung**
**ஹவ்காங் டாவ் மூ குங்**
**779A Upper Serangoon Road**

ஒன்பது பேரரசத் தெய்வங்களின் வழிபாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சிங்கப்பூரின் ஆகப் பழமையான கோயில் ஹவ்காங் டாவ் மூ குங். இந்தத் தெய்வங்கள் ஹாக்கியன் மொழியில் கியூ ஓங் யா என்றழைக்கப்படுகின்றன. இதனால், பக்தர்கள் இக்கோயிலை கியூ ஓங் யா கோயில் என்றும் குறிப்பிடுகின்றனர். பினாங்கில் உள்ள இன்னொரு ஒன்பது பேரரசத் தெய்வங்கள் கோயிலிலிருந்து எடுத்து வரப்பட்ட ஊதுவத்தி சாம்பலுடன், 1902ல் லிம் லோ கிராமத்தில் (இன்றைய வொல்ஸ்கெல் சாலை) ஒரு சந்நிதியாக இக்கோயில் தொடங்கப்பட்டது. அதன் வழிபாட்டாளர்களில் ஹாக்கியன், தியோச்சூ, ஹய்னானீஸ், ஹக்கா உள்ளிட்ட பல்வேறு சீனக் கிளை மொழிகளைச் சேர்ந்தவர்கள் உள்ளடங்கியதாக கோயிலின் ஆரம்பகாலப் பதிவேடுகள் காட்டுகின்றன.

1919ல், புதிய கோயில் கட்டுவதற்காகத் தற்போதைய நிலப்பகுதியைத் தொழிலதிபர் ஓங் சுவீ டோ நன்கொடையாக வழங்கினார். கோயில் 1921ல் கட்டி முடிக்கப்பட்டது. வளைவான கூரை விளிம்புகள் போன்ற பாரம்பரிய ஹாக்கியன் கட்டடக்கலை பாணியில் கோயில் கட்டடம் வடிவமைக்கப்பட்டிருந்தது. பிற்பாடு செய்யப்பட்ட புதுப்பிப்பின்போது, நேரான கூரை விளிம்புகள் போன்ற தியோச்சூ கட்டடக்கலை அம்சங்கள் சேர்க்கப்பட்டன. 1925ல் நிரந்தர தெருக்கூத்து மேடை கட்டப்பட்டது.

சீன சந்திர நாள்காட்டியின் ஒன்பதாவது மாதத்தில் நடத்தப்படும் ஒன்பது பேரரசத் தெய்வங்களின் விழாவுக்கு இக்கோயில் பெயர்பெற்றது. அந்த மாதத்தில் தெய்வங்கள் சொர்க்கத்திலிருந்து பூமிக்கு இறங்கி வருவார்கள் என நம்பப்படுகிறது. ஒன்பதாவது சந்திர மாதத்தின் கடைசி நாளன்று, தெய்வங்களைக் கோயிலுக்கு வரவேற்பதற்காக, கோயிலிலிருந்து சுங்காய் சிராங்கூன் வரை செல்லும் ஊர்வலத்துடன் விழா தொடங்கும். விழாவின் கடைசி நாளன்று, மாபெரும் ஊர்வலத்துடன் ஆற்றில் தெய்வங்கள் வழியனுப்பி வைக்கப்படும்.

ஹவ்காங் டாவ் மூ குங் கோயில், ஹவ்காங் வட்டாரத்துக்கும் நாட்டுக்கும் வரலாற்று, சமூக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அங்கீகரிக்கும் வகையில் தேசிய நினைவுச்சின்னமாக அறிவிக்கப்பட்டது. கோயில் கட்டடத்தின் மரபுடைமையைப் பாதுகாக்கவும், பக்தர்களுக்கு மேம்பட்ட சேவை வழங்கவும், 2016ஆம் ஆண்டில் விரிவான சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கோயிலின் மத்திய கட்டடம் புதிய இணைப்புகளுடன் சீரமைக்கப்பட்டது. அடுக்குமாடி கட்டடமும் சுரங்க வாகன நிறுத்துமிடமும் சேர்க்கப்பட்டன.





புதுப்பிப்புப் பணிகளுக்கு முன்பாக, கோயிலின் கூரை விளிம்புகள் ஹாக்கியன் பாணியில் வளைவாக இருந்தன, 1900களின் முற்பகுதி
*சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



சாலையை அகலமாக்கும் பணிக்காக 1998ல் இடிக்கப்பட்ட கோயிலின் நிரந்தர தெருக்கூத்து மேடை, 1978
*ரொன்னி பின்ஸ்லர் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



ஒன்பது பேரரசத் தெய்வங்கள் வீற்றிருக்கும் பல்லாக்குகள் கோயிலில் ஊர்வலமாகத் தூக்கிச் செல்லப்பட்டன, 1990
*சிங்கப்பூர் பயணத்துறைக் கழகத்தின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



கோயிலில் ஒன்பது பேரரசத் தெய்வங்களைத் தூக்கிச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட பல்லாக்குகள், 1990
*சிங்கப்பூர் பயணத்துறைக் கழகத்தின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*

---

**Masjid Haji Yusoff**
**மஸ்ஜித் ஹாஜி யூசோப்**
**2 Hillside Drive**

1921ல் கட்டப்பட்ட மஸ்ஜித் ஹாஜி யூசோப் பள்ளிவாசலே ஹவ்காங்கின் ஆகப் பழமையான பள்ளிவாசல். பள்ளிவாசல் கட்டப்பட்ட நிலத்தை குஜராத்தி வணிகரும் கொடை வள்ளலுமான அகமது முகமது சாலி அங்கூலியா என்பவர் நன்கொடையாக வழங்கினார். சிங்கப்பூரில் 1874ல் பிறந்த அங்கூலியா, குடிமை விவகாரங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் சமாதான நீதிபதியாகவும், நகராட்சி ஆணைய உறுப்பினராகவும், பல்வேறு பள்ளிவாசல்களிலும் முஸ்லிம் அமைப்புகளிலும் அறங்காவலராகவும் இருந்தார்.

இந்தப் பள்ளிவாசல் அமைக்கப்பட்டதிலிருந்து, ஹவ்காங்கின் முக்கிய அடையாளச் சின்னமாக நீடித்து வருகிறது. ஜான்சன் சாலையிலிருந்த கம்போங் ஹாஜி சிராட் போன்ற முன்னாள் மலாய்-முஸ்லிம் கிராமங்களில் வசித்துவந்த மக்களுக்கு, ஆன்மீக, சமூக மையமாகப் பள்ளிவாசல் விளங்கியது. ஹவ்காங்கின் சீனக் குடியிருப்பாளர்கள், பள்ளிவாசலின் சுற்றுவட்டாரத்தை “செம்பாயாங் டிங்” எனக் குறிப்பிட்டனர். “வழிபாடு” என்பதற்கான மலாய் சொல்லையும், “மாடம்” என்பதற்கான ஹாக்கியன் சொல்லையும் இது உள்ளடக்குகிறது.

1930களில், பள்ளிவாசல் வளாகத்தில் மதராசா அல்-அரேபியா அல்-இஸ்லாமியா அமைக்கப்பட்டது. இந்தச் சமயப் பள்ளி ஹவ்காங்கில் வசித்துவந்த சுமார் 40 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தது. பிற்பாடு, மதராசா உலுமுல் குர்ஆன் எனும் வேறொரு சமயப் பள்ளியுடன் இந்தச் சமயப் பள்ளி இணைந்து, தோ பாயோவுக்கு இடம் மாறிச் சென்றது. அவ்வாறு இணைக்கப்பட்ட சமயப் பள்ளி, இன்று வரை மதராசா அல்-அரேபியா அல்-இஸ்லாமியா என்ற பெயரைத் தக்க வைத்திருக்கிறது.

ஹவ்காங்கில் மேற்கொள்ளப்பட்ட நகர மறுசீரமைப்பால், அவ்வட்டாரத்தில் வசிக்கும் முஸ்லிம்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்தது. இதனால் பள்ளிவாசல்களுக்குச் செல்வோரின் எண்ணிக்கையும் கூடியது. எனவே, 1994ல் பள்ளிவாசலின் கொள்ளளவை அதிகரிக்கவும் வகுப்பறைகள் போன்ற கூடுதல் வசதிகளைச் சேர்க்கவும் மறுசீரமைக்கப்பட்டது. இன்று, ஹவ்காங்கில் வசிக்கும் முஸ்லிம் மக்களுக்குப் பள்ளிவாசல் தொடர்ந்து சேவை வழங்கி வருகிறது.



மறுசீரமைப்புக்கு முன் 1990களில் மஸ்ஜித் ஹாஜி யூசோப், தேதியில்லாதது

*மஸ்ஜித் ஹாஜி யூசோப் பள்ளிவாசலுக்கு நன்றி*



அப்போதைய வெளியுறவு அமைச்சர் S. தனபாலன் பள்ளிவாசலுக்கு வருகையளித்தார், 1984

*மஸ்ஜித் ஹாஜி யூசோப் பள்ளிவாசலுக்கு நன்றி*



பள்ளிவாசலில் நடத்தப்பட்ட இஸ்லாமிய சமய வகுப்பில் கலந்துகொள்ளும் பெண்கள், 1980கள்

*மஸ்ஜித் ஹாஜி யூசோப் பள்ளிவாசலுக்கு நன்றி*

---

**St. Paul's Church**
**செயின்ட் பால்ஸ் தேவாலயம்**
**839 Upper Serangoon Road**

1936ல் கட்டப்பட்ட செயின்ட் பால்ஸ் தேவாலயம், ஆங்கிலிக்க கிறிஸ்துவக் குழுவினரால் 1930களில் தொடங்கியது. ஆரம்பத்தில், வழிபாட்டாளர்களில் ஒருவரது வீட்டில் குழுவினர் வழிபாட்டுக்காகக் கூடினார்கள். அந்த வீடு அப்பர் சிராங்கூன் சாலையில் அமைந்திருந்தது. ஆரம்பகால வழிபாட்டாளர்களில் பெரும்பாலோர்,

சிங்கப்பூரின் வடகிழக்குப் பகுதியில் பணியமர்த்தப்பட்ட பிரிட்டிஷ் ராணுவ வீரர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

கால ஓட்டத்தில், வழிபாட்டினரின் எண்ணிக்கை பெருகிறது. அதோடு, ஆங்கிலிக்க பேராயம் சிங்கப்பூரின் கிராமப் பகுதிகளில் வாழ்ந்துவந்த மக்களையும் சென்றடைய விரும்பியது. இதனால், 1935ல், புதிய தேவாலயக் கட்டடம் கட்டுவதற்காக ஆங்கிலிக்க பேராயம் இந்த நிலப்பகுதியை வாங்கியது.

தேவாலயத்தைக் கட்டும் செலவைப் பிரபல யுரேசிய குத்தகையாளர் ஜார்ஜ் ரே உஹ்லர்ஸ் ஏற்றுக்கொண்டார். இவர், மத்திய ஆங்கிலிக்க தேவாலயமான செயின்ட் ஆன்ட்ரூஸ் தேவாலயத்தில் சேவகராக இருந்தார். உஹ்லர்ஸ் குடும்பம் அப்பர் சிராங்கூன் சாலையில் வசித்து வந்தது. இங்கிலாந்தில் 1934ஆம் ஆண்டு நடந்த கார் விபத்தில் உயிரிழந்த மகன் ஹேரியின் நினைவாக, உஹ்லர்ஸ் குடும்பத்தார் தேவாலயத்தைக் கட்டினார்கள். தேவாலயத்தின் அடிக்கல்லை, ஹாங்காங் ஆளுநர் செயின்ட் ஆன்ட்ரூ கெல்டிகாட் 1935ல் நட்டார்.

தேவாலயக் கட்டடம் பலமுறை புதுப்பிக்கப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டது. அதன் தற்போதைய வழிபாட்டு மண்டபம் 1982ல் சேர்க்கப்பட்டது. கூடுதல் விரிவாக்கங்கள் 1994ல் நிறைவடைந்தன. செயின்ட் பால்ஸ் தேவாலயம் வழிபாட்டுத் தலமாக மட்டுமல்லாமல், சமூகநலப் பணியின் மூலம் ஹவ்காங் சமூகத்திற்கும் சேவை செய்கிறது.




செயின்ட் பால்ஸ் தேவாலயத்தின் கட்டுமானப் பணி, 1936
*செயின்ட் பால்ஸ் தேவாலயத்திற்கு நன்றி*



ஜார்ஜ் ரே உஹ்லர்ஸ், சிங்கப்பூர் சட்ட மன்றத்தின் முதல் பேச்சாளர், வீரப் பெருந்தகை பட்டம் சூட்டப்பட்ட சிங்கப்பூரின் முதல் யுரேசியர், தேதியில்லாதது

*செயின்ட் பால்ஸ் தேவாலயத்திற்கு நன்றி*




செயின்ட் பால்ஸ் தேவாலயத்தின் புகைப்படம், 1983

*லீ கிப் லின் திரட்டிலிருந்து பெறப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. லீ கிப் லின் மற்றும் தேசிய நூலக வாரியம், சிங்கப்பூர் 2009*

---

**6th Milestone**
**6வது மைல்கல்**


நகர மறுசீரமைப்புக்கு முன்பாக, அப்பர் சிராங்கூன் சாலையின் நெடுகிலிருந்த இடங்கள், அவற்றுக்கு ஆக அருகிலிருந்த மைல்கற்களின்படி சுட்டிக்காட்டப்பட்டன. ஒவ்வொரு நகருக்கும் இடையிலான தூரத்தை மைல் கணக்கில் காட்டுவதற்காக

காலனித்துவ நிர்வாகம் மைல்கற்களை நிறுவியிருந்தது. உள்ளூர் மக்கள் 6வது மைல்கல்லை “லக் கோர் சியோக்” (ஹாக்கியன், தியோச்சூ மொழிகளில் “6வது மைல்கல்” ) என்றழைத்தனர். இது ஃபிளவர் சாலையிலிருந்து ஜாலான் பாயோ லாயில் உள்ள 7வது மைல்கல் வரை நீடித்தது.

ஆறாவது மைல்கல்லின் சாலை நெடுகிலும் சந்தை, சுகாதாரப் பராமரிப்பு நிலையம், கிராமங்கள் என பரபரப்பான சமூக மையம் அமைந்திருந்தது. அப்பர் சிராங்கூன் சந்தை முன்பு சைமன் சாலையில் அமைந்திருந்தது. 1948ல் கட்டப்பட்ட இந்தச் சந்தை, கோழி வியாபாரிகளுக்குப் பெயர்பெற்று விளங்கியது. 1999ல் சந்தை மூடப்பட்டது. சந்தைக்கு அருகில் வரிசையாக ஒற்றை மாடி டெரஸ் கடைகள் இருந்தன. அவற்றில் மளிகைக் கடைகளும், உணவகங்களும், வாகனப் பட்டறைகளும் இருந்தன. இன்று, முன்னாள் சந்தைப் பகுதியின் இந்த ஒரு டெரஸ் வரிசை மட்டுமே நிலைத்திருக்கிறது.

ஆறாவது மைல்கல் பொழுதுபோக்குக்கும் சமூக நலனுக்கும் உரிய வட்டாரமாக அறியப்பட்டிருந்தது. தெம்பனிஸ், அப்பர் சிராங்கூன் சாலை சந்திப்பில் ஒரு போக்குவரத்து வட்டரங்கு இருந்தது. அங்கு கதை சொல்வோரின் கதைகளைக் கேட்க மக்கள் கூட்டம் திரளும். லிம் ஆ பின் சாலையில், சிங்கப்பூரின் முதல் கிராமப்புற சமூக மையங்களில் ஒன்றாக உருவெடுத்த லிம் ஆ பின் மருந்தகம் 1953ல் திறக்கப்பட்டது. அங்கு மகப்பேறு மற்றும் குழந்தை நல மருந்தகச் சேவைகள், சிறுவர்களுக்கான வகுப்புகள், சிறுவர் மன்றம் போன்ற சேவைகளும் வசதிகளும் வழங்கப்பட்டன.


நகர மறுசீரமைப்பால் 6வது மைல்கல்லின் நிலத்தோற்றம் மாறியிருந்தாலும், அதன் கிராமப்புறக் கடந்தகாலத்தின் அடையாளங்கள் இன்னமும் அங்கு காணப்படுகின்றன. முன்னாள் லிம் ஆ பின் மருந்தக வளாகத்தின் கட்டடங்கள் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இங்குள்ள வீதிகளின் பெயர்களும், நில உரிமையாளர்களாக இருந்த ஆரம்பகாலக் குடியேறிகளை நினைவுபடுத்துகின்றன. சைமன் சாலை, அருசூ அவென்யூ (யுரேசிய குடியிருப்பாளர் சைமன் ஜோகிம் அருசூவின் நினைவில்), லிம் ஆ பின் மற்றும் புளோரன்ஸ் சாலைகள் (சீனத் தொழிலதிபர் லிம் ஆ பின் மற்றும் அவரது மனைவி புளோரன்ஸ் இயோ நினைவில்) ஆகியன இதற்கான சான்றுகள்.




அப்பர் சிராங்கூன் சாலையில் 1958ல் இருந்த 6வது மைல்கல்.
தெம்பனிஸ், அப்பர் சிராங்கூன் சாலை சந்திப்பில் சைமன் சாலை சந்தை அமைந்திருந்தது.
தேசிய வளர்ச்சி அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி.



லிம் ஆ பின் மருந்தகத்தில் பெண்களும் சிறுவர்களும் சிகிச்சைக்காகக் காத்திருக்கின்றனர், 1958
தகவல், கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி



சைமன் சாலை சந்தையிலிருந்த மீன் கடை, 1986

*சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*




குடியிருப்பாளர்களிடையில் சைமன் சாலை சந்தை எனப் பிரபலமாக அறியப்பட்ட அப்பர் சிராங்கூன் சந்தையின் நுழைவாயிலில் இருந்த பெயர்ப்பலகை, 1986

*சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*